கொடுப்பது இல்லை. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முறைப்படி இரண்டாவது மாநில ஊதியக் குழுவினர் கூறிய அத்தகைய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறது. எந்தெந்தப் பதவிகளை எந்த அளவுக்கு ஆக்கலாம் என்பதை சிற்றூர் வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அவர் அறிக்கை வந்ததற்குப்பிறகு அதற்கான முடிவுகளை அரசு ஆராய்ந்து செய்யும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, இந்த விஷயமாக திரு. முருகேச முதலியார் குழு பரிசீலனை செய்து சிபாரிசுகள் செய்தார்களே ? அவை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் தன்மைகள் வேறு. நிதி வளர்ச்சி எந்த அளவுக்கு செய்யப்படலாம் என்பதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். இது தனியாக ஆராய வேண்டிய ஒன்று. இதைப்பற்றிச் சில பிரச்சினைகள் அட்மினிஸ்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனிடம் விடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சோழவந்தான் பேரூராட்சி

*** 555 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சோழவந்தான் பேரூராட்சியை நகரமன்றமாக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

புராதனக் கலைகளின் வளர்ச்சி

*** 556 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற புராதன கலைகளை வளர்க்க அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். அரசு ஆதரவில் இயங்கி வரும் தமிழ்நாடு சங்கித நாடக சங்கம் ஆண்டுதோறும் கிராமியக் கலைக் குழுக்களுக்கு உதவிமான்யம் வழங்கி வருவதுடன், இத்துறையில் சிறந்த கலைஞர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துப் பாராட்டும், விருதும் வழங்கி கௌரவித்து வருகிறது.

Advisory Committee on Leprosy

* 557 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the All India Leprosy Advisory Committee met at Madras on or about the 10th August 1971;

(b) whether the representatives of the State Government attended this meeting; and

(c) if so, the stand taken by them?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மாநில அரசிற்கு அதிக மானியங்கள் உரிய காலத்தில் அளிக்கவும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொழு நோய் சிகிச்சை நிலையங்களைப் பராமரிப்பதற்கு ரொக்க உதவித் தொகையும் மருத்துவ மனைகளில் தொழுநோய்ப் பிரிவு கட்டுவதற்கு உதவி அளிக்குமாறும், மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, will this Government come forward to separate the number of patients who are to have treatment in the hospital and those patients who are to have ambularory treatment, that is, treatment as out-patients and whether it is possible to sit down and find out how many are there in this group and how many in that group, so that the expenditure for the Government can also be reduced by concentrating on patients who can come as out-patients, especially because most of the cases can be cured according to the modern treatment as out-patients? Will this Government see that eradication of leprosy takes proper footing by concentrating along with the in-patients/out-patients also and if so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நோய் நீக்கப் பணிகள் என்பது பரவலாக வேறு வேறு கட்டங்களில் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. புற நோயாளிகளாக அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்துகொண்டே மருத்துவம் செய்யப்படும் வகையிலும், 'சர்வே அண்ட் எஜுகேஷன் ட்ரீட்மெண்ட்' என்று பரா-மெடிகல் ஒர்க்கர்கள் மூலமாகப் பல பகுதிகளில் ஏராளமாக வேலைகள் நடைபெறுகின்றன. 'லெப்ரஸி கண்ட்ரோல் யூனிட்' என்பது சற்று விரிவானது. அதில்